ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2126/21 - 2019 ජූනි මස 04 වැනි අඟහරුවාදා - 2019.06.04

*2126/21 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 04 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச.வ.பி. 21/78* (xv) *(அ).*

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

*27(1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர் ஏ. இபதுல் றவூப் ஹக்கீம் ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மீது, இலங்கை றுகுணு பல்கலைக்கழகத்தைத் தாபிக்கும் (2019 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 18 ஆந் திகதிய 2111/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் கடைசியாகத் திருத்தப்பட்டவாறானதும்) 1984 ஆம் ஆண்டு சனவரி மாதம் 24 ஆந் திகதிய 281/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட, சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளைக்கான அட்டவணையை, அவ்வட்டவணையின் நிரல்* I *இல் காணப்படுகின்ற "முகாமைத்துவ மற்றும் நிதிப்பீடம்" என்னும் விடயத்திற்கு நேரொத்ததான அட்டவணையின் நிரல்* II *இல் உள்ள "3. சந்தைப்படுத்தற் துறை" என்னும் பதிவை உடனடுத்துப் பின்வரும் பதிவைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையால் திருத்துகின்றேன் :*

*"4. மனிதவள முகாமைத்துவத் துறை".*

*ஏ. இபதுல் றவூப் ஹக்கீம்,*
*நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர்.*

*கொழும்பு,*
*2019, யூன் 03.*

*06-530*

1A - PG 4544 — 518 (2019/06) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.